பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 09 செவ்வாய்க்கிழமை [24-12-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 28

# தொண்டமானை பதவி விலகும்படி பௌத்த அமைப்புக்கள் வற்புறுத்து!

## கூட்டுச் சேர்ந்து அறிக்கை

கொழும்பு, டிசம்பர் 24

திரு. எஸ். தொண்டமான் அமைச்சராகப் பதவி வகிக்கத் தகுதியற்றவர். அவர் அமைச்சரவை அங்கத்தவராகத் தொடர்ந்து பதவி வகிக்க முடியுமா என்பது கேள்விக்குரியது. அவர் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

—இவ்வாறாக, பல பௌத்த அமைப்புகள் கூட்டாகச் சேர்ந்து வெளியிட்ட அறிக்கை ஒன்றில் வலியுறுத்தி உள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டதற்கு இணங்க, வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பதில்லை என்று அரசாங்கம் மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளது. ஆனால் திரு. தொண்டமான் தமது யோசனையில் வடக்கு, கிழக்கை இணைத்து

[3 ஆம் பக்கம் பார்க்க]

## 12 வகை வேலைத்திட்டங்கள் சுகாதார வாரத்தில் அமுல்

### வெவ்வேறு குழுக்கள் பொறுப்பேற்கும்

யாழ்ப்பாணம், டிச. 24

யாழ். மாநகர சபையில் அனுஷ்டிக்கப்படும் சூழல், சுகாதார வாரத்தின்போது, மாநகர எல்லைக்குள் 24 வட்டாரங்களிலும், சுகாதாரம் பேணுவதற்கான பன்னிரண்டு வகையான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இந்த வேலைத்திட்டங்களை ஒரு வார காலத்தில் செய்து முடிக்கக் கூடியதாக வெவ்வேறு குழுக்கள் மக்கள் ஒத்துழைப்புடன் தமது பணிகளை மேற்கொள்ளும்.

இத்தகவலை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தெரிவித்தார்.

வேலைத் திட்டக் குழுக்களில் வட்டாரச் சுகாதாரக் குழுக்கள், இந்நாள் அமைப்புகள், சன சமூக நிலையங்கள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள்,

[3 ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கில் தனிநாடு அமைவதை தடுக்க ஊவாவில் தேடுதல்!

### பதுளை பொலிஸ் பொறுப்பதிகாரி சொல்கிறார்

பதுளை, டிச. 24

"மலையகத்தில் புலிகள் ஊடுருவல் செய்திருப்பதாக பாதுகாப்புப் படையினருக்கு தகவல் கிடைத்துள்ளது. மலையகத்தில் நிலைமை மோசமடைந்தால் அதனைச் சமாளிக்க வடக்கிலிருந்து இராணுவத்தினரை மலையகத்துக்கு அனுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அத்தகைய சந்தர்ப்பம் வருமானால் வடக்கில் தனிநாடு உருவாகும் சாத்தியம் ஏற்படும். இதனை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்துவதற்காகவே ஊவா மாகாணத்தில் பொலிஸார் தேடுதல் நடத்தி சந்தேகத்தின்பேரில் பலரைக் கைதுசெய்கின்றனர்".

—இவ்வாறு தெரிவித்தார் பதுளையில் இயங்கி வரும் விசேட புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கருணாரத்ன.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் தொடர்ந்து இராணுவ நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிச. 24

வவுனியாவில் விமானப் படையினரின் உதவியுடன் இராணுவ நடவடிக்கைகள் தொடர்வதாக அறிவிக்கப்படுகிறது.

ஆகாய விமானத் தாக்குதல் (ஷெல் தாக்குதல்) இடம்பெற்று வருகின்றன.

அரசு தீவு ஒன்றை எட்டுவதற்கு முன்னர் இராணுவ ... விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சில பகுதிகளைக் கைப்பற்ற வேண்டுமென்று இராணுவம் விரும்புகிறது என்பதையே இது காட்டுகிறது என செய்தி ஏஜென்சி ஒன்று கருத்து வெளியிட்டது.

இதேவேளை—

நேற்று முன்தினம் வவுனியா படையினர் குருமன் காட்டுப் பக்கமாக புதிய காவலரண்களை அமைத்த போது மக்கள் குடியிருப்புகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும்—

அதனால் அந்தப் பகுதியில் இருந்த தமிழர்கள் இடம்பெயர்ந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழ் மக்கள் வாழும் கிராமங்கள் மீது ஷெல் தாக்குதல்களும், விமானத் தாக்குதல்களும் ... வருவதாக ...

## முச்சந்தி முரளி



தொண்டமானை உண்டு இல்லை எண்டு பாக்கிறது எண்டு முடிவு செய்திட்டினம் போலை......!

## பொன்னாலையில் குண்டுச்சத்தம்

யாழ்ப்பாணம், டிச. 24

காரைநகர் இராணுவ முகாம்பகுதியிலிருந்து பொன்னாலைப் பக்கத்தை நோக்கி நேற்றுக்காலை 5 மணி முதல் தொடர்ச்சியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

அதற்கு முன்னர் - நேற்று அதிகாலை - பொன்னாலைப் பாலம் பகுதியில் இரண்டு பெரிய குண்டுச்சத்தங்கள் கேட்டன. [உ-15]

## வீதி ஒழுங்கு; தீவிர கண்காணிப்பு

யாழ்ப்பாணம், டிச. 24

யாழ் நகரப் பகுதியில் வீதி ஒழுங்கு நடவடிக்கைகளை தமிழீழ காவல் துறையினர் முனைப்புடன் கண்காணித்து வருகின்றனர்.

ஒழுங்கு விதிகளை மீறி சைக்கிளில் செல்வோர் காவல் துறையினரால் அழைத்துச் செல்லப்பட்டு வீதி ஒழுங்குகளைப் பற்றி அவர்களுக்கு விளக்கமளித்த பின்னர், அவர்கள் வீடு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

## குளோரின் எடுத்துவரத் தடை!

யாழ்ப்பாணம், டிச. 24

யாழ். மாவட்ட அகதி முகாம்களில் நிலவும் சுகாதாரச் சீர்கேட்டை நீக்குவதற்கு தேவையான குளோரினை இங்கு எடுத்துவர கூட்டுப் படைத் தலைமையகம் அனுமதி மறுத்துள்ளது.

அகதிமுகாம்களை பராமரிக்கும் தொண்டர் நிறுவனம் ஒன்று குளோரின் மற்றும் எரிப்பதற்கான மசிருக்குத் தேவையான மருந்துவகைகள் ஆகியவற்றை எடுத்துவர அனுமதி கோரியிருந்தது. அதற்கு அனுமதி ... தெரிவிக்கப்படுகிறது. [உ-8]

## வெளியூர் தபால்கள் நேற்று வந்து சேர்ந்தன

கடந்த ஒருமாத காலத்தின் பின் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 801 பொதிகள் நேற்று கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டன.

நேற்று முன்தினம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த 'லிலி' கப்பலிலே அவை இங்கு எடுத்து வரப்பட்டன.

தபால் பொதிகளை எடுத்து வருவதற்காக யாழ். பிரதம தபாலக ஊழியர்கள் நேற்று பருத்தித்துறை துறைமுகத்துக்குச் சென்றிருந்தனர்.

இன்று முதல் இத்தபால்கள் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## வவுனியா - தாண்டிக்குளம் போக்குவரத்து தடை?

கொழும்பு, டிச. 24

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டு எல்லையை விஸ்தரிப்பதற்காக உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்படுவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியாவுக்கு வடக்கே இராணுவக் கட்டுப்பாட்டு எல்லையை விஸ்தரிக்கும் இராணுவ நடவடிக்கைகளும் ஆரம்பமாகியுள்ளன.

தாண்டிக்குளத்திற்கு அப்பால் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும்—

நான்கு நாட்களுக்கு மக்கள் அப்பகுதிக்குச் செல்ல முடியாதென ஒலிபெருக்கி மூலம் படையினர் கடந்த ஞாயிறு அறிவித்தனர் என்றும்—

இதனால் வடபகுதி போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

வட பகுதியில் இருந்து பயணிகள் வவுனியா வரு

[4ஆம் பக்கம் பார்க்க]

## யுத்த நிறுத்தம் குறித்து லோறன்ஸ் திலகர் கருத்து

கொழும்பு, டிச. 24

எதிர்வரும் தைத்தபர் — புதுவருட காலத்தில் பெரும்பாலும் யுத்த நிறுத்தம் ஒன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவிக்கக்கூடும்.

—இவ்வாறு விடுதலைப் புலிகளின் பிரமுகர் லோறன்ஸ் திலகர் பிரான்ஸின் தலைநகர் பாரிஸிலிருந்து இந்திய ஆங்கிலத் தினசரி ஒன்றுக்கு சில தினங்களுக்கு முன்னர் வழங்கிய பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிப்பது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உயர்மட்டம் ஆராய்ந்து வருவதாகவும் — அவர்சொன்னார்.

ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு நடத்துவதற்கான வாய்ப்புகள் குறித்துக் கேட்டபோது—

அமைதிக்கான பேச்சுக்களை ஆரம்பிக்கவும், இனப் பிரச்சினை சம்பந்தப்பட்ட விடயங்களை ஆராய்வதற்கு மான தருணம் தற்போது வந்திருக்கிறது எனத் தாம் கருதுவதாக அவர் சொன்னார்—என்று இந்தியப் பத்திரிகையை மேற்கோள் காட்டி "தினகரன்" செய்தி வெளியிட்டிருக்கிறது. [உ-8]

## இலங்கைக்கான உதவிகளை நெதர்லாந்து நிறுத்தியது!

ஸ்ரீலங்காவில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைக் காரணம் காட்டி ஸ்ரீலங்காவுக்கான சகல உதவிகளையும் இடை நிறுத்தியிருப்பதாக நெதர்லாந்து அரசு அறிவித்திருக்கிறது.

எதிர்காலத்தில் மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் ஸ்ரீலங்கா அரசு அக்கறை காட்டினால் மட்டுமே அந்த நாட்டிற்கு உதவிகளை வழங்குவது பற்றி ஆலோசிக்க முடியும் என்று அந்த அரசு அறிவித்திருக்கிறது.

நெதர்லாந்து அரசினால் அண்மையில் விடுக்கப்பட்ட இந்த அறிவிப்பு, மேற்குலகில் ஸ்ரீலங்கா அரசின் போக்கிற்கு கடும் எதிர்ப்புத் தோன்றியிருப்பதையே எடுத்துக் காட்டுவதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

[உ-8]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## A/L கணக்கியல் புத்தகம்

கணக்கியல் கோட்பாடுகளும் கணக்கீட்டு நியமங்களும் ஆசிரியர்: பா. பாலச்சந்திரன், விரிவுரையாளர் யாழ். பல்கலைக் கழகம், பக்கங்கள் 165, விலை 65 ரூபா. கிடைக்குமிடங்கள்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, மண்டேலா ரேடர்ஸ், அறிவகம்.

[19020]

## செவ்வாய் மாற்றம்

ரூபா 7/-. வெள்ளிதோறும் பிரேமதாசா ஆயுட்கால ஜனாதிபதியும், சட்டம் மற்றும் புற தொகையாக ஸ்ரீமாவின் அரசியல் அஸ்தமனமும், நீசச் செவ்வாய் தொகையால் ஜெயலலிதாவின் பதவி ஆட்டமும், விமா மு சுாயினத்தால் வேசர் பச்சேவ் ராஜினாமாவும் ஏற்படும். (நூலாசிரியர் Prof. சத்தியதாசன்) ஸ்ரீகாந்த் தம்பகம்ஸ், நல்லூர்.

(4450)

## ECALOM

மனோகராச் சந்தி.

## A/L-92

பொருளியல்

— உதயன்

பகுதி I பணம்

பகுதி II செலவதி-நிலுவை

ஆரம்பம்:

23 - 12 - 1991

காலை 6-00 மணி

(சி-1212)

## தரமுயர்ச்சி பரீட்சை

நவாலி, டிச. 24

யாழ். செயலகத்தில் சிற்றூழியர்களாக பணிபுரிபவர்களை தரம் இரண்டு, தரம் ஒன்று பதவிகளுக்கு தரம் உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை மேலதிக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெறும்.

(த-100)

# பிறந்த நாள் வாழ்த்து

இராமகிருஷ்ணனன் நகுலாம்பிகை

தம்பதிகளின் செல்வப் புதல்வி

★ செல்வி அபிராமி ★

தனது முதலாவது பிறந்தநாளை (இன்று) 24-12-91 இல் ஜேர்மனியில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, மாமன்மார், மாமிமார், சித்தப்பாமார், சின்னம்மாமார் மற்றும் உற்றார், உறவினர்கள், பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

இ. இராசரத்தினம்,

இளைப்பாறிய கிராமசேவையாளர்.

சிவகாமி இல்லம்,

அராலி மேற்கு.

[19172]

# ஆசிரியர் தேவை

அரசியல் விஞ்ஞானம் கற்பிப்பதற்கு போதனாசிரியர் தேவை

தகுதி: பட்டதாரி ஆசிரியர் அல்லது க. பொ. த. உயர்தரத்தில் அரசியலை ஒரு பாடமாகக் கற்றிருக்க வேண்டும்.

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 15 — 01 — 1992

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

தலைமைச் செயலகம்,

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி,

தமிழீழம்.

(வைகறை, யாழ். பல்கலைக்கழக - மருத்துவபீடம் முன்பாக)

(19170)

# ஆரம்ப ஆசிரியர் சேவை

போட்டிப் பரீட்சைக்கான 2 மாத கால

**பயிற்சி வகுப்புகள்**

ஆரம்பம்: 26-12-1991 2.30 மணி

முழுக்கட்டணம்: 150/-

அச்சடித்த பாடக் குறிப்புகள் இலவசம்.

LIMITED NUMBER IN EACH BATCH

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3rd CROSS STREET, JAFFNA.

(சி-1147)

# பிறந்த நாள் வாழ்த்து



## அன்ரனி பெதறிக்ஸ்ஷன்

பிரான்சிலுள்ள அன்ரனி டொறின் யசிந்தா தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் பெதறிக்ஸ்ஷன் 24-12-1991இல் தனது முதலாவது பிறந்த தினத்தை வெகு விமர்சையாக பிரான்சில் தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, தொட்டப்பா, தொட்டம்மா, பெரியப்பா, பெரியம்மா, அன்ரிமார், மாமாமார், றீகன் அண்ணா, செரின் அக்கா, சித்தப்பா, மாமிமார், ஐயா, அம்மாச்சி அனைவரும் ஊர்த்து அன்னையின் அருள் பெற்று சகல செல்வங்களுடனும் நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

[19151]

# 1992 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

எனது 17-12-1991ஆம் திகதிய கேள்வி அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்படுகிறது:-

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் பட்டினம் / மானிப்பாய் கிராமம் / பண்டத்தரிப்பு பட்டினம் / பண்டத்தரிப்பு கிராமம் ஆகிய நிர்வாக பிரதேசத்திற்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள், சந்தைக் கடைகள் ஆகியவற்றிற்கான சீல் வைத்த கேள்விகள் எதிர்வரும் 27-12-91 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் 27-12-91 நண்பகல் 12-00 மணி வரை விநியோகிக்கப்படும்.

க. கனகரெத்தினம்

விசேட ஆணையாளர்,

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை.

பிரதேச சபைக் காரியாலயம்,

நகர மண்டபம்,

மானிப்பாய். 23-12-91

(இ/1149)

# பயிலுனர் ஆசிரியர் சேவை

A/L பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு

ஓர் அரிய சந்தர்ப்பம்

வடக்கு - கிழக்கில் அதிக வெற்றிடங்கள்

## போட்டிப் பரீட்சைக்கான விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: **28-12-91** மு.ப. 9 மணி

பாடநெறி:-

1. பொது உளச்சார்பு 2. பொது அறிவு

தகைமைகள்:- 18 — 35 வயதிற்கு இடைப்பட்ட க. பொ. த. உ/த பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி.

விண்ணப்ப முடிவு திகதி: 06 - 01 - 1992

விண்ணப்பப் படிவங்களையும் விவரத் திரட்டினையும் நேரில் பெறலாம்.

★ இலவச பாடக் குறிப்புகள்

★ விரிவுரைகள் - சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

★ கட்டணம் ரூபா 290 00 (முழுப் பயிற்சிக்கும்)

## அஸ்ரன் கல்வி நிலையம்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

[இ-1081]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கார்த்திகேசு அன்னப்பிள்ளை

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் தற்போது மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் வசித்துவந்தவருமாகிய திருமதி கார்த்திகேசு அன்னப்பிள்ளை 20-12-91 வெள்ளிக்கிழமை இரவு சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற பசறை பிரபல வர்த்தகர் E. V. கார்த்திகேசு அவர்களின் அன்பு மனைவியும், நாகேந்திரம், சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தாயாரும், நமசிவாயம், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் மானிப்பாய் கோட்டைக் வீதி இல்லத்தில் 24-12-91 செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

கோட்டைக் வீதி,

மானிப்பாய்

தகவல்:

கு. நமசிவாயம்

[மருமகன்]

[19173]

## சூசைப்பிள்ளை அருளானந்தம்

(முல்லைத்தீவு, ஸ்ரான்டட் என்ஜினியரிங் வேர்க்ஸ் முன்னாள் உரிமையாளர்)

அன்னாரின் பூதவுடல் இன்று (24 - 12 - 1991) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணியளவில் சுண்டிக்குளி புனித புவானியார் தேவாலயத்தில் பூசைப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

ஆர். அருளானந்தன்.

(மக்கள் வங்கி, யாழ். பிரதேச முகாமையாளர்)

(19171)

## திருமதி சிறீவதனி கணேசராசா

தெருமூடிவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சிறீவதனி கணேசராசா 17 - 12 - 1991 இல் சென்னையில் அகால மரணமானார். இவர் காலஞ்சென்ற கூட்டுறவுப் பரிசோதகர் திரு. ஐயாத்துரை - பரமேஸ்வரியின் சிரேஷ்ட புத்திரியும், கணேசராசாவின் அன்பு மனைவியும், ஷர்மிளா, கௌரீசன், விதுனன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கனடாவில் வசிக்கும் ஸ்ரீதரன், சிறீசந்திரமோகன், திருமதி யோகேந்திரன், திருமதி விஜயராசன், சிறீதாரணி ஆகியோரின் சகோதரியும், திரு. யோகேந்திரன், திரு. விஜயராசன், திருமதி சிறீவதனி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19 - 12 - 1991 அன்று சென்னை அண்ணா நகரில் நடைபெற்றன. இதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

சிவரத்தினம் விக்கினராசா.

தெருமூடிவில்,

தொண்டமனாறு.

[19169]

## மரியாம்பிள்ளை யோசேப்

புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட மரியாம்பிள்ளை யோசேப் (இளைப்பாறிய கணக்காளர்) மணிக்கூண்டையில் அவரது இல்லத்தில் 19-12-91 அன்று காலமானார். இவர் லூர்த் மேரியின் அன்புக் கணவரும், சகோதரி பிரஸ்கிலா, அன்னம்மா ஆகியோரின் அன்பு சகோதரனும், றொபின் (பொலிஸ் உத்தியோகத்தர்), றோய் (சுவாமி, பாகிஸ்தான்), றோகான் (கனடா), றஞ்சித் (கனடா), ராஜ் (விரிவுரையாளர்), ரூபி (நோர்வே), ரஜனி, றோசினி, றஞ்சி (கணக்காளர்), றோமா, றஜனி (B. Sc) ஆகியோரின் அன்புத் தந்தையும், நல்லையா (நோர்வே), சந்திரன், ஆனந்த (கணக்காளர்), ரவி, திருமதி றொபின் (ஆசிரியை), சாந்தா, வேரா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

றஞ்சித் யோகா

(மருமகள்)

தில்லையல வடக்கு,

கோட்டப்பனை,

சரவெட்டி.

[4458]

## மரியாம்பிள்ளை மெட்டில்

மரியாம்பிள்ளை மெட்டில் 22-12-1991 அன்று காலமானார்.

அன்னார் சின்னப்பு - திரேசம்மா ஆகியோரின் அன்பு மகளும், லூயிடன், டனி, டலிஸ் (Andriesz & Co.), அன்ரன், பப்பர், றோச் ஆகியோரின் அன்புத் தாயாரும், வென்சிலோஸ், செல்லக்கேஸ், சர்வா, பவளம், ராஜன் (ஜேர்மனி), அருட்சகோதரர் செல்வதாஸ் (பாகிஸ்தான்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் அடக்கச் சடங்கு 23-12-91 அன்று கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நடைபெற்றது.

தகவல்:

1/1, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

றோச் [மகன்]

[இ/1160]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சூழல், சுகாதாரம பேணுவோம்

சூழல், சுகாதாரத்தைப் பேணும் பணிகள் நேற்று யாழ்ப்பாண நகரத்தில் ஆரம்பமாகின. ஒரு வாரத்துக்கு இப்பணிகளில் மூவாயிரத்து ஐநூறுக்கும் அதிகமான தொண்டர்கள் ஈடுபட உள்ளனர். நகரைப் போலவே குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சூழல், சுகாதாரத்தைப் பேணுவதற்கு ஏற்பாடாகி உள்ளது.

எம்மைச் சுற்றிவரவுள்ள சூழல் தான் எம்மை வாழ வைப்பது. அது மாசடைந்தால் எமது வாழ்வின் வளங்கள் வலுவிழந்து விடும். அதன் விளைவாக எமது வாழ்வு பல வகைகளாலும் பாதிப்புறும். வாழ்க்கையே தடைப்பட்டும் போகக்கூடும்.

சுகாதாரம் பேணப்படாவிடில் நோய்கள் பரவும். மக்களின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும். அவர்கள் நோயாளிகளாக அவஸ்தைப்பட நேரிடும். ஒட்டுமொத்தமாக சமூகத்தின் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் அது தடுத்துவிடும்.

ஆகையால் சூழலையும், சுகாதாரத்தையும் பேணுவதற்கு பரந்த அளவில் தீவிர நடவடிக்கை எடுக்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும்.

குறிப்பாக மாரிகாலத்திலும் அதற்குப் பிந்திய பனிகாலத்திலும் சுற்றாடலைச் சுகாதாரமாக வைத்திருக்காவிடில் பல தொற்று நோய்கள் பரவும் அபாயத்து உண்டு. நுளம்பு, இலையான் போன்றவற்றாலும், பலவித வைரஸ் மற்றும் நுண்ணிய கிருமிகளாலும் ஆபத்தான நோய்கள் பரவி விடும்.

இந்த நோய்கள் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் இலகுவில் பரவிப் பாதிக்கும் சாத்தியம் அதிகம். இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்துள்ள மக்களில் பலரும் இப்போது அகதி முகாம்களில் வாழ்வதால் தொற்று நோய்கள் வேகமாகப் பரவும் ஆபத்துஉண்டு.

ஆகையால் நாங்கள் வாழும் பிரதேசங்களைச் சுகாதாரமாக, சுத்தமாக வைத்திருப்பது மிகவும் இன்றியமையாததாகும். மக்கள் நோய்க்கு ஆளாகி அவஸ்தைப்படுவதை விட, பெரும் எண்ணிக்கையில் இறந்து போவதை விட, அதனைத் தடுப்பதே விவேகமானதாகும்.

அதனை உணர்ந்த, சூழலையும், சுகாதாரத்தையும் பேணுவதில் ஒவ்வொருவரும் அக்கறை காட்ட வேண்டும்; சிரத்தையும் எடுக்க வேண்டும். சூழல் வாரம், சுகாதார வாரம் என்பவற்றை வருடத்தில் ஒரு தடவை அல்லது சில தடவைகள் கொண்டாடுவதால் உரிய பயன் கைகூடாது.

சூழல், சுகாதாரம் பேணுதல் நிரந்தர திட்டமாக, நீண்ட காலத் திட்டமாக வகுக்கப்பட்டுச் செயலாக்கப்படவேண்டும். மக்களுக்கு அவற்றின் இன்றியமையாமை குறித்து வெறும் அறிவை மட்டுமன்றி உணர்வையும் ஊட்டுதல் அவசியம்.

மக்கள் ஒவ்வொருவரும் சூழல், சுகாதாரம் பேணுவதன் அவசியத்தை, தேவையை, முக்கியத்துவத்தை உணரும் விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவை வெறும் எழுத்திலும், பேச்சிலும் இல்லாமல் நடைமுறையில் செயல்வடிவம் பெறவேண்டும். சூழலை, சுகாதாரத்தைப் பேணுவது ஒவ்வொருவரின் நாளாந்த வாழ்க்கையின் கடமை அம்சங்களாக மாறும் விதத்தில் செயற்திட்டங்கள் அமைக்கப்பட வேண்டும். அப்போதே எதிர்பார்க்கும் விளைவைப் பெற ஏதுவாகும்.

## 'லில்லி' மூலம் பருப்பு வகைகள்

யாழ்ப்பாணம், டிச. 24

நேற்றுமுன்தினம் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'லில்லி' கப்பலில் ஆயிரத்து 600 மெற்றிக் தொன் அரிசி, 430 மெற்றிக் தொன் சீனி, 100 மெற்றிக் தொன் மா உட்பட கழுந்து, பயறு, சித்தாமணிக்கடலை, சோளப்பி போன்றவை எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்தக் கப்பலில் ஆஸ்பத்திரிகளுக்கு மருந்தும், தனியார் வர்த்தகர்களுக்கு சவர்க்காரமும் வந்துள்ளன.

கப்பலிலிருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்றே ஆரம்பமாகின.

(உ-3)

## வங்கி ஊழியருக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிச. 24

வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் அரசாங்க வங்கிகளின் ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்படாதிருந்த ஆபத்துக்கால ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை உடனடியாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நிதியமைச்சின் செயலாளரை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டது. (உ-த)

## "பண்டைய தமிழகம்" நூல் வெளியீடு

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் எழுதிய "பண்டைய தமிழகம்" என்னும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும். துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார்.

இவ் வெளியீட்டு விழாவில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசியுரையும், கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வெளியீட்டுரையும், பேராசிரியர் வ. ஆறுமுகம் மதிப்பீட்டுரையும் நிகழ்த்துவர்.

சங்கீத வித்வான் இளைய மனோகரி திருநாவுக்கரசின் புல்லாங்குழல் இசையும், சங்கீத பூஷணம், வண்ணிசைப் புலவர் திரு. நா. வி. மு. நவரத்தினத்தின் சங்கீதக் கச்சேரியும் நிகழ்ச்சிகளில் இடம்பெற உள்ளன.

## வயிற்றோட்டத்துக்கு இளம்பெண் பலி!

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த, இளம் குடும்பப் பெண் ஒருவர் வயிற்றோட்ட நோயினால் நேற்று ஆஸ்பத்திரியில் மரணமானார்.

ஊர்காவற்றுறை நாரந்தனையில் இருந்து இடம்பெயர்ந்து நாவற்குழி அகதிமுகாமில் வசித்த யேசுதாஸன் அக்னேஸ் (வயது 33) என்ற இளம்பெண்ணே மரணமானவராவார்.

இந்த முகாமில் இன்னும் பலர் வயிற்றோட்ட நோய்க்கு இலக்காகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-15)

## 12 வகை வேலைத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாநகர சபை உணவுப் பரிசோதகர்கள், சுகாதாரக் குழுத் தொண்டர்கள், வர்த்தக சங்கத்தினர், கடை உரிமையாளர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், மாநகர சபை ஊழியர்கள், கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மாநகர சபையால் பயிற்றப்பட்ட தொண்டர்கள், அரச நிறுவன ஊழியர்கள், அகதி முகாம்களில் உள்ள சுகாதாரக் குழுவினர், மாநகர சபைத் தொழிலாளர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகிய பல தரப்பினரும் வெவ்வேறு குழுக்களில் பங்குபற்றுவர்.

மாநகர சபை வட்டாரங்களில் உள்ள குப்பை கூழங்களை அகற்றுவதற்கு டிராக்டர்களும், வண்டில்களும் சம்பந்தப்பட்ட குழுக்களுக்கு கொடுத்து உதவப்படும்.

மாநகர சபையில் இவ்வாரத்தில் மேற்கொள்ளப்பட உள்ள வேலைத் திட்டங்கள் பின்வருமாறு:—

★ கரையோரப் பகுதிகளில் உள்ள கட்டட இடிபாடுகளை அப்புறப் படுத்தல்.

★ வீடு, வளவு, வீட்டை அண்டிய வீதியோரம் ஆகியவற்றைத் துப்பரவு செய்தல்.

★ மலசல கூடங்களில் காணப்படும் வெடி புத் துவாரங்களை அடைத்தல்.

★ சிற்றுண்டிச் சாலைகள், உணவுச் சாலைகள், தேநீர் சாலைகள் ஆகியவற்றில் சுகாதாரம் பேணுதல்.

★ சந்தைகள், மீன் - இறைச்சிச் சந்தைகளில் குப்பை அகற்றல், கழுவுதல், கிருமிநாசினி தெளித்தல்.

★ ஆஸ்பத்திரி வளவுகளைச் சுத்திகரித்தல்.

★ பாடசாலைகளின் சுற்றாடல்களைத் துப்புரவாக்கல்.

★ கிணறுகளுக்கு குளோரின் இடுதல்.

★ வடிகால்களைச் சுத்தம் செய்தல்.

★ கட்டாக்காலி நாய்களை ஒழித்தல்.

★ இடம் பெயர்ந்தோர் வாழும் முகாம்களைத் துப்புரவு செய்தல்.

★ [illegible]

## சாவ் விளையாட்டுக்கள்

# 8 தங்கங்களைப் பெற்று ஸ்ரீலங்கா முன்னணியில்!

## திபீகா சண்முகம் சாதனை

கொழும்பு, டிச. 24

சார்க் விளையாட்டுப் போட்டியில் இரண்டாம் நாளான நேற்று அதிக தங்கப் பதக்கங்களைப் பெற்று ஸ்ரீலங்கா முன்னணி வகிக்கிறது.

ஸ்ரீலங்கா நீச்சல் வீராங்கனையான திபீகா சண்முகம் நேற்று இரண்டு தங்கப்பதக்கங்களைத் தட்டிச் சென்றார்.

நேற்று இறுதிப்போட்டிகள் நடைபெற்ற தனிநபர் நிகழ்ச்சிகளிலேயே ஸ்ரீலங்காவுக்கு முன்னணி இடம் கிடைத்தது.

எனினும் அடுத்து வரும் நாட்களில் இடம்பெறவிருக்கும் குழு நிகழ்ச்சிகளில் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் அதிகளவு பதக்கங்களைப் பெறும் என்றும்—

ஸ்ரீலங்காவுக்கு கணிசமான எண்ணிக்கை பதக்கங்கள் கிடைக்கும் என்றும் விளையாட்டு வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

### வெற்றியீட்டிய இலங்கையர்

ஆண்களுக்கான 400 மீற்றர் நீச்சலில் ஜூலியன் போலிங்கும், பெண்களுக்கான நூறு மீற்றர் நீச்சலில் திபீகா சண்முகமும் புதிய சாதனைகளை நிலைநாட்டினர்.

ஆண்களுக்கான நூறு மீற்றர் நீச்சலில் இம்திகாஸ் ஸாத்தும், பெண்களுக்கான இரு நூறு மீற்றர் ஓட்டத்தில் மெனிக்கா கூரேயும்—

பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் யமுனா ராபேயவும், ஈட்டி எறிதலில் வஜிந்தா அமரசேகராவும்—

10 ஆயிரம் மீற்றர் ஆண்கள் ஓட்டத்தில் ஜி. கருணாரத்தினாவும் முதலாவதாக வந்து தங்கப் பதக்கங்களைப் பெற்றனர்.

நேற்று நாடுகள் பெற்றிருந்த பதக்கங்களின் விபரம் வருமாறு:-

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| ஸ்ரீலங்கா | 8 | 2 | 3 |
| இந்தியா | 2 | 4 | 3 |
| பாகிஸ்தான் | 1 | 3 | 1 |
| பங்களாதேஷ் | — | 1 | 1 |

(உ-எ)

## தொண்டமானை பதவி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார். அதன் மூலம் அவர் அரசாங்கத்தின் அறிவிக்கப்பட்ட கொள்கையை மீறியுள்ளார். அவ்வாறானவர் தொடர்ந்தும் அமைச்சரவை அங்கத்தவராகப் பதவி வகிக்க வேண்டுமா என்பதே மக்கள் முன் உள்ள கேள்வியாகும்—என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. தொண்டமானின் யோசனையில் "ஈழம்" என்ற பெயரைத் தவிர சுதந்திரமான அரசு ஒன்றை அமைப்பதற்கான மூலக்கூறு உண்டு. வடக்கையும் கிழக்கையும் இணைத்து ஓர் அமைப்பை உருவாக்குவதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை மக்கள் உணரவேண்டும்.

வடக்கு —கிழக்கு அமைப்பிடம் துறைமுகங்களை ஒப்படைப்பது, வெளிநாட்டு உதவி பெறுவதற்குப் பேச்சுவார்த்தை நடத்தும் அதிகாரம், விடுதலைப் புலிகளைப் பாதுகாப்புப் படைகளில் சேர்த்துக்கொள்ளுதல், காணி நிர்வாகம் சம்பந்தமான முடிவு எடுக்கும் அதிகாரம் ஆகிய அம்சங்கள் பெரும் ஆபத்துக்களை விளைவிக்கும்.

விடுதலைப் புலிகளை படைகளிலும், பொலிஸிலும் சேர்க்க வேண்டும் என்ற யோசனை அவர்களுக்குச் சட்டபூர்வ அந்தஸ்து வழங்கும் ஆபத்தான முடிவாகும்.

விடுதலைப் புலிகளின் கொடுமைகளை உணர்ந்த இந்தியா அவர்களுக்குத் தடை விதித்திருக்கிறது. அவர்களை ராஜீவ் காந்தி கொலையின் சந்தேக நபர்களாகவும் இந்தியா கருதுகிறது. ஆயுதப் படையினரும், பொலிஸாரும் புலிகளின் பயங்கரவாதத்தை முறியடிக்க ஆயிரக்கணக்கில் தமது இன்னுயிரை ஈர்த்துள்ளனர். இத்தகைய நிலையில் திரு. தொண்டமானின் யோசனைகள் பிரிவினையை மேலும் மோசமடையச் செய்யும்— என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில்—

பௌத்த சாசன, பௌத்த விவகாரங்களுக்குப் பொறுப்பான நடவடிக்கைக் குழுவின் சார்பில் மடிகே பஞ்ஞாசிக மாநாயக்க தேரர் மற்றும் வெலி மந்நாரட்ண நாயக்க தேரர், பெலன்வில விமலரட்ன தேரர், மடுவெவ சோபித தேரர், திவியஹபாலி தேரர், ஓமல்பே சோபித தேரர், அக்குரட்டிய நந்த தேரர் மாமலம சேமிஸார தேரர் ஆகியோரும்—

மகாபோதி சங்கத்தின் சார்பில் அதன் தலைவரும் முன்னாள் அமைச்சருமான காமினி ஜெயசூரியா, பௌத்த இளைஞர் மன்றத் தலைவர் ஈ. எல். அமரசிங்க, தர்மவிஜய நிறுவனத்தின் தலைவர் ஒஸ்வெல்ட் குணசேகரா, அகில இலங்கை பௌத்த பெண்கள் காங்கிரஸின் தலைவர் சந்திரா டி. செய்சா ஆகியோரும்—

ஸ்ரீலங்கா மது ஒழிப்புச் சங்கத்தின் உப தலைவர் கே. எச். கருணாரட்ன, ஆசிய பௌத்த காங்கிரஸின் தலைவர் ஜி. ரணதுங்க, அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் பேராசிரியர் எம். பீ. ஆரியபால, பௌத்த மெஞ்ஞான சங்கத் தலைவர் டபிள்யூ. டி. வி. மாதந்திஸ், உலக பௌத்த பெண்கள் சங்கத் தலைவர் ராணி கருணாரட்ண, பௌத்த சாசன சேவைச் சங்க உப தலைவர் எம். ஏ. [illegible] ஆகியோரும் ஒப்பமிட்டுள்ளனர். (உ-3-5)

## "மணலாறு" நூல்வெளியீடு

யாழ்ப்பாணம், டிச. 24

"மணலாறு" என்ற நூல் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும். முன்னாள் மணலாறு மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ரமேஷ் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், விடுதலைப் புலிகள் பிரமுகர்களும் கலந்து கொள்வார்கள். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார வாரம் நகரில் ஆரம்பம்

## பஸ் நிலையத்தில் நேற்று சிரமதானம்

யாழ். மாநகரசபைப் பிரதேசத்தில் நேற்றுத்தொடக்கம் சூழல் சுகாதார வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம், சூழல் சுகாதார வாரத்தை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

யாழ். பஸ்நிலையப் பகுதியில் நேற்றுக்காலை நடந்த இந்த வைபவத்தில் பல்துறை சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல், நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ். மாவட்ட தளபதி செந்தாளன், மக்கள் முன்னணியின் தமிழீழ அரசியல் பொறுப்பாளர் தமிழ்மாறன் உட்பட மாநகரசபை, அதன் சுகாதாரப் பகுதி, யாழ். செயலகம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள், வர்த்தகர்கள், தொழிலாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பஸ்நிலையப் பகுதியில் உள்ள குப்பை கூளங்களும் இடிபாடுகளும் சிரமதானத்தின் மூலம் அகற்றப்பட்டன. (அ-8)

# யாழ், மாவட்ட எம், பிக்களின் பதவி காலாவதி!

கொழும்பு, டிச. 24

யாழ்ப்பாண மாவட்டத்தின் புதிய தேர்தல் குழுவின் சார்பில் நியமிக்கப்பட்ட ஆறு எம்.பிக்களும் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன் பதவி ஏற்காவிடில், இவர்களின் நியமனம் காலாவதியாகி விடும் என்று அறிவிக்கப்படுகிறது. (ந-ஏ)

## கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 24

சமூகக்கல்வி சேவைக்கான ஆலோசகர்களுக்கான கூட்டம் ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்வித் திணைக்களத்தில் நடைபெறும். (த)

## கலந்துரையாடல்

1989, 90, 91 ஆம் ஆண்டுகளுக்கான யாழ். தொழில் நுட்பக் கல்லூரி பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (த)

# இந்து வாலிபர் சங்கத்தின் மணிவிழா

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் மணிவிழா இம்மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் மூன்று தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை [ஆரம்பப் பிரிவு] மண்டபத்தில் தினமும் பிற்பகல் 2 மணிக்கு மணிவிழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

விழாவில் சமயச் சொற்பொழிவுகள், கவியரங்கம், பட்டிமண்டபம், நடனங்கள், நாட்டிய நிகழ்ச்சிகள், நாடகங்கள் என்பன இடம்பெறும்.

விழாவின் முதல் நாளன்று மணிவிழா கௌரவ நிகழ்ச்சியில் ஊருக்கு உழைத்த பெரியோர்கள் கௌரவிக்கப்படுவர். இறுதி நாளன்று கவிமாமணி ந. வீரமணி ஐயர், திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்), நாதஸ்வரக் கலைநிதி என். கே. பத்மநாதன் ஆகியோர் கௌரவிக்கப்படுவர். விழா முதல் நாளன்று நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவார். (அ)

# மாணவர் உணவு முத்திரைக்குரிய பொருள்களை உடன் பெறுக!

யாழ். மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் தமது மே, ஜூன், ஜூலை மாத மதிய உணவு முத்திரைகளுக்கான பொருள்களை நாளை மறுதினத்துக்கு முன்னர் ப. நோ. கூ. சங்க கிளைகளில் கொள்வனவு செய்ய வேண்டும்.

யாழ். செயலக சமூக சேவைப் பணிப்பாளர் திருமதி க. சிவசிதம்பரம் இவ்வாறு கேட்டுள்ளார்.

ப. நோ. கூ. சங்கங்கள் தமது வருடக் கணக்கை முடிக்க வசதியாகவே அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். [உ-3]

# தீ விபத்தில் இருவர் காயம்

பெற்றோல் "பரவின்" வாங்கி மண்ணெண்ணெயை எரித்து கொண்டிருந்த போத்தல் விளக்கிற்குள் ஊற்றும்போது விளக்கு குபீரென பற்றி எரிந்தது; எண்ணெய் விட்டவரும், அவரைக் காப்பாற்ற உதவிக்குச் சென்றவரும் தீயில் எரிந்து படுகாயமடைந்தனர்.

அச்சுவேலி மேற்கில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் இராசசேனகா (வயது 33) என்ற குடும்பப் பெண்ணும், அவரைக் காப்பாற்ற முயற்சித்த அவரது ஒன்றுவிட்ட சகோதரர் கணேஸ் இளங்கோ [வயது 30] என்பவருமே படுகாயமடைந்தனர்.

இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [உ-15]

# மூதூர் தாக்குதலில் போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், டிச. 24

திருகோணமலை மாவட்டம் தோப்பூர் - பச்சநூர் இராணுவ முகாமில் இருந்து ரோந்து வந்த படையினர் மீது கடந்த சனியன்று புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரமரணமடைந்தார்.

படையினர் பாரிய இழப்புக்களுடன் முகாமுக்கு பின் வாங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த தாக்குதலில் மேஜர் மணி (பொன்னையா சந்திரலிங்கம் - மூதூர்) என்ற போராளியே வீரமரணமடைந்தார்.

இத்தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் உயிரிழந்ததாக இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருந்தன என்பது தெரிந்ததே. (உ-8)

# நில அளவைப் பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு வசதி

நில அளவைகள் திணைக்களத்தில் நில அளவை விஞ்ஞானியில் பட்டப்படிப்பு நெறிக்கு அனுமதித்தலுக்கும், இலங்கை நில அளவையாளர் சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த வெற்றிடங்கள் குறித்து நவம்பர் மாதம் 8 ஆம் திகதிய வர்த்தமானியில் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

ஜி. சி. ஈ. [உயர் தர] பரீட்சையில் 1987, 88, 89 ஆண்டுகளில் தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகியவற்றில் ஏதேனும் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இவற்றுக்கு விண்ணப்பிக்க முடியும்.

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து இப்பதவிகளுக்கு போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்காததால், விண்ணப்ப திகதியை நீடிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாக யாழ். நில அளவை அத்தியட்சகர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

முன் கூறிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் அனுப்புவது சம்பந்தமான மேலதிக விபரங்களை கோவில் வீதியில் உள்ள மேற்படி அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ-8)

## எம். ஜி. ஆர். நினைவு நாள்

யாழ்ப்பாணம், டிச. 24

எம். ஜி. ஆர். முன்னேற்றக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மறைந்த முன்னாள் தமிழக முதல்வரும், திரைப்பட நடிகருமான திரு. எம். ஜி. ராமச்சந்திரனின் 4 ஆவது ஆண்டு நினைவு நாள் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

## வடக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊவா மாகாணத்தின் பாதுகாப்பு மற்றும் அங்கு நிலவும் சூழ்நிலை குறித்து ஆராய்வதற்காக விசேட மாநாடு ஒன்றை ஊவா மாகாண முதலமைச்சர் திரு. பேர்ஸி சமரவீர கடந்தவார இறுதியில் கூட்டியிருந்தார்.

பாதுகாப்பு உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட இந்த மாநாட்டில் உரையாற்றுகையிலேயே உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் கருணாரத்ன முன்கண்டவாறு கூறினார்.

"மலையகத்தில் நெருக்கடி நிலை தொடர்ந்தால் அங்கும் தனிநாட்டுக் கோரிக்கை வலுக்கும். அதனை முன்னரே தடுப்பதற்காகவே பொலீஸார் நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றனர்" என்றும் அவர் சொன்னார்.

ஊவா மாகாணத்தில் பொலீஸார் கடந்த சில வாரங்களாக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளின் போது நூற்றுக்கும் அதிகமான தமிழர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-த-3]

## மாணவர்களுக்கு அழைப்பு

சூழல், சுகாதாரம் பேணல் சம்பந்தமான நடவடிக்கைகளுக்காக யாழ். ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் யாழ். கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

யாழ். நகர் மற்றும் வண்ணை நகர், நல்லூர், வண்ணார்பண்ணை தெற்கு கொத்தணிப் பகுதிகளைச் சேர்ந்த தேசியப் பாடசாலைகள், தனியார் பாடசாலைகள் மற்றும் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர்கள், சுகாதாரக் குழுக்களில் அங்கம் வகிக்கும் ஆசிரியர்கள், மாணவர்கள், சென் ஜோன்ஸ் பிரிவினர் அனைவரும் தத்தமது பாடசாலைகளில் இன்று காலை 9 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டிருக்கிறது.

## அறிவித்தல்

மாணவ உணவு முத்திரைக்கும், உணவு முத்திரைக்கும் [12 ஆம் புள்ளி] உரிய பொருட்களை எமது சங்கக் கிளைகளில் 26-12-91 ஆம் திகதிக்கு முன்னர் உரியவர்களைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் அறியத் தருகிறேன்.

பொது முகாமையாளர்

யாழ். ப. நோ. கூ. சங்கம்,
-வரையறுக்கப்பட்டது- யாழ்ப்பாணம். [கி/1148]

## அறிவித்தல்

## வ.இ.ச. சபைப் பரீட்சைகள் - 1992

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களும், அறிவுறுத்தல்களும் 24 - 12 - 1991 செவ்வாய் தொடக்கம் வ. இ. ச. சபைப் பணிமனையில் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை ரூபா பத்து. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 31 - 01 - 1992 வெள்ளிக்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இ. சுந்தரலிங்கம்,
யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரும்,
வட இலங்கை சங்கீத சபைத் தலைவரும். [கி-1218]

## வவுனியா -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரை இராணுவத்தினர் தடைசெய்துள்ளனர். வவுனியாவிலிருந்து தாண்டிக்குளம் வரை சேவையில் ஈடுபடும் வாகனங்களும் மறு அறிவித்தல் வரை சேவையில் ஈடுபடுத்தப்பட மாட்டாது. [த-ஏ]

## மரண அறிவித்தல்

### பேதுருப்பிள்ளை நீக்கிலப்பிள்ளை

[அப்பையா]

மண்டைதீவைச் சேர்ந்த பேதுருப்பிள்ளை நீக்கிலப்பிள்ளை (அப்பையா) நேற்றுக் காலமானார்.

இவர் மேரிப்பிள்ளை (ரோசம்) யின் கணவரும், அன்ரனி [புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்], மரியதாஸ், லூர்து ஆந்திறேஸ் [ஜெனரல் நேர்ஸிங் ஹோம், திருநெல்வேலி], சூசைதாஸன் ஆகியோரின் தகப்பனாரும், ரெஜினா, பத்மராணி ஆகியோரின் மாமனாரும், றோயல், டயனா, நீற்றா, ரெனா, ஜோய், நீவன், ரஜீவ், டில்சாந்தி, சுதன்யா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இல. 38, அடப்பன் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து இன்று பிற்பகல் 4-00 மணிக்கு சார் ஜோன் சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
அன்ரனி
(மகன்)

இல. 38, அடப்பன் வீதி
யாழ்ப்பாணம். [18974]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், காவலர் வீதி, 292 2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24 - 12 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org